இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 05-08-2023

# பிரதமர் வரவே மாட்டார்?!

கடந்த பத்து நாட்களாக நாடாளும் மன்றத்துக்கு நாடாளும் பிரதமர் வந்தாரா?

21.6.2023 - சில நிமிடங்கள் வந்திருந்தார்.
24.6.2023 - வரவில்லை
25.6.2023 - வரவில்லை
26.6.2023 - வரவில்லை
27.6.2023 - வரவில்லை
28.6.2023 - வரவில்லை
31.6.2023 - வரவில்லை
1.7.2023 - வரவில்லை
2.7.2023 - வரவில்லை
3.7.2023 - வரவில்லை.

- இதுதான் நாடாளுமன்றத்துக்கு அவர் தரும் மரியாதையும், மதிப்புமா?

இந்திய நாட்டின் பிரதமராக நரேந்திரமோடி பொறுப்பேற்றுக் கொண்ட போது, நாடாளுமன்றத்தை ஜனநாயகத்தின் கோவில் என்று சொன்னவர் அவர்தான். நாடாளுமன்ற வளாகத்துக்குள் முதன்முதலாக நுழையும் போது கரம் கூப்பி வணங்கினார். நாடாளுமன்றக் கட்டடத்துக்கு பவ்யமாக வணக்கம் வைத்தார். “அரசியல் சட்டம்தான் என்னுடைய புனித நூல்” என்றார்.

கோவிலை எப்படி மதிக்கிறார் - புனித நூலை எந்த இடத்தில் வைத்துள்ளார் என்பது இதன் மூலம் தெரியவில்லையா? மணிப்பூர் விவகாரத்துக்குப் பதில் அளிக்க முடியாமல் அவர் வரவில்லை என்றும் சொல்ல முடியாது. அவர் ஆட்சிக்கு வந்தது முதல் இதுதான் நிலைமை. 2014 இல் அவர் பிரதமர் ஆனார். 2016 வரையிலான நாடாளுமன்ற நடவடிக்கைப் புள்ளிவிபரத்தின் படி 122 முக்கியமான நேரங்களில் பிரதமர் மோடி அவையில் இல்லை. முக்கியமான நேரங்களில் இல்லை என்றால் கேள்வி நேரம், விவாத நேரங்கள் பற்றிச் சொல்ல வேண்டியது இல்லை.

மணிப்பூர் மாநிலமே எரிகிறது. அந்த மாநிலத்துக்காக இந்திய நாடே பதற்றமாகி இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம் நின்று உச்சநீதிமன்றம் குரல் கொடுக்கிறது. ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மணிப்பூர் சென்று பாதிக்கப் பட்டவர்களைப் பார்த்துவிட்டு திரும்பி இருக்கிறார்கள். குடியரசுத் தலைவர் மாளிகையை ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் முற்றுகையிட்டு குடியரசுத் தலைவரிடம் முறையிட்டுள்ளார்கள். ஆனால் மணிப்பூர் பா.ஜ.க. அரசும், ஒன்றிய பா.ஜ.க. அரசும் சொரணையில்லாமல் கிடக்கிறது.

**மழைக்காலக் கூட்டத் தொடர் 20 ஆம் தேதி தொடங்கியதில் இருந்து அவை நடவடிக்கைகள் நடக்கவே இல்லை. ‘மணிப்பூர் குறித்து விவாதிக்க வேண்டும்’ என்பதுதான் எதிர்க்கட்சிகளின் கோரிக்கை. அந்த விவாதத்துக்குக் கூட தயாராக இல்லை. அவையை ஒத்தி வைத்துவிட்டு விவாதிக்கத் தயாராக இல்லை. ஒத்தி வைத்து விவாதிக்கும் அளவுக்கு மணிப்பூர் பெரிய விவகாரம் அல்லவா? இன்னும் பலர் செத்த பிறகு விவாதிக்கலாமா? சாவு எண்ணிக்கை போதாதா? வன்முறை போதாதா? 2 பேரைத்தானே நிர்வாணமாக்கினார்கள், இன்னும் பலரை ஆக்க வேண்டுமா? எதை எதிர்பார்க்கிறார்கள்?**

‘குறுகிய நேர விவாதத்தை ஏற்றுக் கொள்கிறோம்’ என்கிறார்கள். மணிப்பூரில் இத்தனை முதல் தகவல் அறிக்கை பதிந்துள்ளோம் என்று சொல்லி விட்டு விவாதம் நடத்தியதாக கணக்குக் காட்டவா?

**பிரதமர் பதில் சொல்ல மாட்டாராம். அவருக்கு அதை விட என்ன வேலை? வெளிநாடு போவது மட்டும்தானா? நாடாளுமன்றத்துக்கு வெளியில்தான் பேசுவாரா? நாடாளுமன்றத்துக்கு வெளியில்தானே பேசுவேன் என்றால் எதற்காக 20 ஆயிரம் கோடி போட்டு புதிய கட்டடம் கட்ட வேண்டும்? செங்கோல் எதற்காக? திரும்பப் பெற வேண்டாமா?**

“நேரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் பெயருக்கு பின்னால் காந்தியின் பெயரைப் பயன்படுத்துவது ஏன்? நேருவின் பெயரை எதற்காகப் பயன்படுத்தவில்லை?” என்ற அறிவுப்பூர்வமான கேள்வியை முன்பு கேட்டாரே பிரதமர். அவர்கள் காந்தி என்று பயன்படுத்துவது ‘அப்பா’ - ‘தாத்தா’ பெயர் பெரோஸ் காந்தி என்ற அடிப்படையில்தானே? இந்திரா காந்தி அவர்கள், ‘திருமதி காந்தி’ என்று அழைக்கப்பட்டது அந்த அடிப்படையில்தான். இதை எல்லாம் கேட்பதற்கு வந்தவர் இப்போது ஏன் மறுக்கிறார்? அப்போது சிரித்த பா.ஜ.க. உறுப்பினர்கள், இப்போது தலைகவிழ்ந்து உட்கார்ந்து இருப்பது ஏன்?

“தி.மு.க. எதற்காக காங்கிரஸுடன் கூட்டுச் சேர்கிறது?” என்று, மயிலாப்பூரில் கேட்க வேண்டிய கேள்வியை மாநிலங்களவையில் கேட்டாரே பிரதமர். இதை எல்லாம் கேட்பதற்கு அவைக்கு வந்தவர் இப்போது ஏன் வர மறுக்கிறார்?

அவ்வளவு ஏன்? பா.ஜ.க. எம்.பி.களுக்கு 2021ஆம் ஆண்டு இறுதியில் குளிர்காலக் கூட்டத்தொடர் தொடங்கும் போது பிரதமர் என்ன அறிவுரை சொன்னார்?

**நாடாளுமன்ற கூட்டத்தொடருக்கு ஒழுங்காக வராத எம்.பி.க்களை நோக்கி... “உங்களை மாற்றிக் கொள்ளுங்கள், இல்லையேல் மாற்றங்கள் நிகழும்.**

**மசோதாக்கள் வந்தாலும் வரவில்லை என்றாலும் அனைவரும் சபையில் இருப்பது கட்டாயம். குழந்தைகளுக்கு பாடமெடுப்பது போன்று மீண்டும் மீண்டும் சொல்ல முடியாது” என்று எச்சரிக்கை விடுத்தாரே? நாடாளு மன்றத்துக்கு வராத இவரை யார் எச்சரிப்பது?**

பிரதமர் பதில் சொல்ல மாட்டாராம். உள்துறை அமைச்சர் சொல்வாராம். “இது உள்துறை அமைச்சருக்கான கேள்வி மட்டுமல்ல. பிரதமருக்கு உட்பட்ட விஷயங்கள் இவை. அவர் (பிரதமர்) பெறும் தகவல்கள், உள்துறை அமைச்சரால் பெற முடியாது. அதில் ஒரு வரம்பு இருக்கிறது. அதனால்தான் மணிப்பூர் விவகாரத்தில் பிரதமர் மோடியின் அறிக்கையை நாங்கள் கேட்கிறோம்.” என்று காங்கிரஸ் தலைவர் கார்கே சொல்லி இருக்கிறார். இந்த விவகாரத்தில் உள்துறையே தவறு செய்திருந்தாலும் அதனைச் சொல்லக் கூடிய அதிகாரம் பிரதமருக்கு இருக்கிறது. ஆனாலும் அசைந்து கொடுக்கத் தயாராக இல்லை பிரதமர்.

••




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.8.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சியில் 227 நபர்களுக்கும், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் 84 நபர்களுக்கும், பேரூராட்சிகள் இயக்குநரகத்தில் 10 நபர்களுக்கும், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் 130 நபர்களுக்கும் என மொத்தம் 451 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ.ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஆர்.கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி. தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில்

# 451 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக. 5-

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 451 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.8.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சியில் 227 நபர்களுக்கும், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் 84 நபர்களுக்கும், பேரூராட்சிகள் இயக்குநரகத்தில் 10 நபர்களுக்கும், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் 130 நபர்களுக்கும் என மொத்தம் 451 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

மாநிலத்தின் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை மேம்படுத்துதல், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்குதல், நகர்ப்புர வசிப்பிடங்களில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட பாதாள சாக்கடைத் திட்டம், மழைநீர் வடிகால் திட்டம், சாலை மேம்பாட்டுப் பணிகள், நகர்ப்புர ஏழைகளுக்கு குடியிருப்புகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டங்களை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இத்துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெறவும், காலிப் பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, பணிக்காலத்தின் போது உயிரிழந்த அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சி**

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 227 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு சாலைப் பணியாளர்கள் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளையும்;

**நகராட்சி நிர்வாக இயக்குநரகம்**

நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 84 பணியாளர்களின் வாரிசுதாரர் களில், 21 நபர்களுக்கு இளநிலை உதவியாளர், 22 நபர்களுக்கு வருவாய் உதவியாளர், 4 நபர்களுக்கு பணி ஆய்வாளர்,

22 நபர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர், 15 நபர்களுக்கு அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களுக் கான பணிநியமன ஆணைகளையும்;

**பேரூராட்சிகள் இயக்குநரகம்**

பேரூராட்சிகள் இயக்குநரகத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 10 பணியாளர்களின் வாரிசுதாரர்களில், 3 நபர்களுக்கு பில் கலெக்டர், 4 நபர்களுக்கு இளநிலை உதவியாளர், 3 நபர்களுக்கு அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளையும்;

**தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்!**

தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 130 பணியாளர்களின் வாரிசுதாரர்களில், 13 நபர்களுக்கு இளைய வரைவு அலுவலர், 32 நபர்களுக்கு இளநிலை உதவியாளர், 9 நபர்களுக்கு ஓட்டுநர், 41 நபர்களுக்கு பதிவுரு எழுத்தர், 35 நபர்களுக்கு காவலாளி ஆகிய பணி யிடங்களுக் கான பணிநியமன ஆணைகளையும்;

என மொத்தம் 451 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் ஆர். கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருப்போரூர் வடக்கு ஒன்றியத்தில் 10 இடங்களில் கிராமம் கிராமமாகச் சென்று கழகக் கொடியேற்றி வைத்து மக்களைச் சந்தித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு ஒன்றியச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.எல். இதயவர்மன் வெள்ளிப் பேனா நினைவுப் பரிசு வழங்கினார். மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் உடனுள்ளார்.

